தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 02/பேரூ/2022

நாள் 16.07.2022

திரு. P. மணிவண்ணன்,
சக்கம்பட்டி, ஆண்டிப்பட்டி ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆண்டிப்பட்டி பேரூராட்சி, ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட எண்.18–12–10A பொட்டகுளம் பாதை, சக்கம்பட்டி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. P. மணிவண்ணன் என்பவரின் 10.01.2022 புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.01.2022ல் பெறப்பட்டு, 02/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட எண்.18–12–10A பொட்டகுளம் பாதை, சக்கம்பட்டி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. P. மணிவண்ணன் என்பவர் அளித்துள்ள புகார் மனுவில் சக்கம்பட்டி கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட தனது குடும்பத்தைச் சேர்ந்த தான் பல ஆண்டுகளாக சிங்கப்பூரில் பணிபுரிந்துவருவதாகவும், சக்கம்பட்டி கிராமத்தில் சர்வே எண்.2193/3ல் தனது தந்தை பெயரில் இருந்த இடம், தனது தாயாருக்கு தானம் செய்யப்பட்டு, அவர்களது காலத்திற்குப் பிறகு தனது பெயரில் மாற்றப்பட்டு, அடுத்து தனது மனைவி பெயருக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் மாற்றம் செய்யப்பட்டதாகவும், மேற்படி சொத்தில் எவ்வித வில்லங்கமும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேற்கண்ட இடத்தில் தனது தந்தையார்

முறைப்படி அனுமதிபெற்று வீடுகட்டியிருந்தார் என்றும், அந்த வீடு இடிந்து பயனற்ற நிலையில் இருந்ததால், அவ்வீட்டை மறுபடி புதுப்பித்துக் கட்ட முடிவு செய்து, இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே அனைத்து ஆவணங்களையும் முறையாக ஆண்டிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்து, கட்டட அனுமதி (Plan Approval) பெற்றுள்ளதாகவும், கொரோனா தொற்று காரணத்தினாலும், தான் சிங்கப்பூரில் வேலைபார்த்த நிலையில் பயணச் சிக்கல்கள் காரணத்தினாலும், வீடு கட்டுவதில் தடை ஏற்பட்டதென்று குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் தனது ஊரைச் சேர்ந்த திரு. ஆ. ராமசாமி (முன்னாள் சேர்மன், உறனுமன்கோவில் எதிர்புறம், சக்கம்பட்டி) வீடு கட்ட விடாமல் பலவகையில் இடைஞ்சல் செய்துவருவதாகவும், அவர் மறைமுகமாக தன்னிடம் ஆதாயம் பெற முயல்வதாக சில தனிநபர்கள் மூலம் தான் அறிந்ததாகவும், அவர் ஆண்டிப்பட்டி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரிடம் எவ்வித ஆதாரமும் இன்றி, வாய்மொழி புகார்களை அளித்து, தனது செல்வாக்கின்மூலம் அவர்களை நிர்பந்தப்படுத்தி வீடு கட்டுவதற்கு பல வகையிலும் தொந்தரவு செய்துவந்தார் என்றும், மேலும் பல தனி நபர்கள் மூலமாகவும் தனக்கு எதிராக தொந்தரவு செய்துவருகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார். கொரோனா பெருந்தொற்று காரணமாக நிறுத்திவைத்திருந்த வீடு கட்டும் பணியை தற்பொழுது தொடங்க இருப்பதால், மீண்டும், திரு. ஆ. ராமசாமி நிர்பந்தத்தின்பேரில் தனக்கு ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து தேவையற்ற தொந்தரவுகள் இனிமேல் வராமல் இருந்திடவும், ஆண்டிப்பட்டி பேரூராட்சி தனது அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து, முறையான திட்ட அனுமதி அளித்திருப்பதை கருத்தில் கொண்டு தன்னை வீடு கட்ட அனுமதித்து உதவிடுமாறு கோரி, இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

மனுதாரர் தனது புகாருக்கான ஆதார ஆவணங்களாக (1) தனது தாயார் பெயரில் இருந்த தான பத்திரம் (2) சொத்துவரி ரசீது நகல் (3) சொத்தின் பெயரில் யாதொரு வில்லங்கமும் இல்லை என்பதற்குரிய சான்று (4) வாரிசு சான்றிதழ் (5) தனது மனைவி திருமதி. R. ஆதித்தியலட்சுமி பெயருக்கு மாற்றப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திர நகல் (6) ஆண்டிப்பட்டி பேரூராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதி (Plan Approval) நகல் மற்றும் (7) ஆண்டிப்பட்டி பேரூராட்சி அளித்த நோட்டீசுக்கு அளிக்கப்பட்ட பதிலறிக்கையின் நகல் ஆகியவற்றை இணைத்தனுப்பியுள்ளார். மேலும், இது தொடர்பாக தன்னிடம் விளக்கம் கேட்க தேவைப்பட்டால் தன்னை அலைபேசியில் தொடர்பு கொள்ளலாமென்றும், தான் ஊரில் இல்லாத காலங்களில் மனுதாரர் சார்பாக அவரது மாமா திரு. ராமராஜ் அவர்களை தொடர்பு கொள்ளலாமென்றும், தனது மனு மீதான விசாரணையை துரிதமாக எடுத்துக்கொள்ளுமாறும் கோரியுள்ளார்.

2. ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 23.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 17.03.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 23.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

3. மனுதாரர் திரு. மணிவண்ணன் தற்போது வெளிநாட்டில் இருந்துவருவதால், அவரது புகார் மனுவில் வேண்டியுள்ளதன்படி, அவரது மாமா திரு. S. ராமராஜ், த/பெ. சுப்பிரமணியன் என்பவர் மனுதாரரின் ஒப்புதலுடன் இம்முறைமன்ற நடுவத்தின் **23.3.2022** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "எனது மருமகன் திரு. மணிவண்ணன் அவரது தந்தையால் முறைப்படி அனுமதி பெற்று கட்டப்பட்ட வீடு பழுதடைந்த நிலையில், அதனை இடித்துவிட்டு புதிதாக வீடு கட்டுவதற்கு முயற்சி மேற்கொண்டார். இரண்டு வருடங்களுக்கு முன்பு அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்து, கட்டட அனுமதியும் அவரால் பெறப்பட்டது. கொரோனா காலத்தை முன்னிட்டு வீடுகட்டும் பணி தடைபட்டு தற்போது வீடுகட்ட முற்படும்போது எங்களது ஊரைச் சேர்ந்த முன்னாள் சேர்மன் மறைமுகமாக ஆதாயம் பெறவேண்டி மேற்கண்ட வீட்டைக் கட்ட பேரூராட்சி அலுவலர்கள் மூலம் இடைஞ்சல் செய்து வருகிறார். எனவே, அனைத்து ஆவணங்களும் உள்ள எனது மருமகன் வீட்டை கட்டுவதற்கு பேரூராட்சி அலுவலர்கள் இடைஞ்சல் செய்யாமல் இருக்க ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட வீடு தொடர்பான பத்திர நகல், பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவற்றின் நகல்களையும், மேலும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடமிருந்து தக்க சான்றிதழ்களை பெற்று ஒருவார காலத்தில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் **23.03.2022** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சி சக்கம்பட்டி பகுதியில் சர்வே எண்.2193/3ல் சுமார் 712 சதுர அடி உள்ள இடத்தில் வீடு கட்டுவதற்கு ஆதித்யலட்சுமி என்பவர் பெயரில் கட்டட அனுமதி **5.8.2019**ல் வழங்கப்பட்டது. மேற்கண்ட இடத்தில் வீடு கட்டுவதற்கு பேரூராட்சி முன்னாள் சேர்மன் திரு. ஆ. ராமசாமி என்பவர் ஆட்சேபனை தெரிவித்தார். அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் மேற்கண்ட இடம் அரசு புறம்போக்கு (நத்தம்) என தெரியவந்ததையடுத்து, மேற்கண்ட கட்டட உரிமத்தை ஆண்டிப்பட்டி பேரூராட்சியின் **10.12.2019** நாளிட்ட செயல்முறையின் மூலம் ரத்து செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு புறம்போக்கு என்பதற்கு ஆதாரமான 'A' ரிஜிஸ்டரின் கையொப்பமிட்ட உண்மை நகலை ஒருவார காலத்திற்குள் சமர்ப்பிக்கின்றேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான எனது **23.3.2022** நாளிட்ட கடிதம் மற்றும் அதன் இணைப்புகளை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. ஆண்டிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரது புகார் மனு மீது அளித்துள்ள **18.3.2022** நாளிட்ட விளக்க அறிக்கையில் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சி சக்கம்பட்டி பகுதியில் சர்வே எண்.2193/3ல் சுமார் 712 சதுர அடி உள்ள இடத்தில் வீடு கட்டுவதற்கு ஆர். ஆதித்யலட்சுமி என்பவர் பெயரில் கட்டட அனுமதி உரிமம் எண்.60/2019–2020 நாள் 05.08.2019ல் வழங்கப்பட்டது. மேற்படி இடத்தில் வீடு கட்டுவதற்கு ஆ. ராமசாமி (முன்னாள் சேர்மன்) என்பவர் ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் விசாரணை மேற்கொண்டதில் மேற்படி இடமானது அரசு புறம்போக்கு நிலம் என தெரியவந்தது. எனவே, கட்டட அனுமதி உரிமம் ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது செயல்முறைகள் ந.க.எண்.395/2019/அ3 நாள் 10.12.2019–ன்படி ரத்து செய்து ஆணையிடப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

6. மனுதாரரின் புகார் மனு மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், மனுதாரரது சார்பில் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜரான திரு. ராமராஜ் என்பவரது வாக்குமூலம், வாக்குமூலத்திற்குப் பின்னர் அவர் அளித்துள்ள ஆவணங்கள் மற்றும் ஆண்டிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம், வாக்குமூலத்தின் அடிப்படையில் அளிக்கப்பட்ட கூடுதல் ஆவணங்கள், விளக்க அறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் அளித்துள்ள புகார் மனுவில் ஆண்டிப்பட்டி வட்டம், சக்கம்பட்டி கிராமத்தில் சர்வே எண்.2193/3 உள்ள இடம் தனது தந்தை பெயரிலிருந்து, தனது தாயாருக்கு தான பத்திரம் மூலம் மாற்றம் செய்யப்பட்டு, அதன் பின் அவர்களது ஒரே வாரிசான தனது (மணிவண்ணன்) பெயருக்கு மாற்றப்பட்டு, மணிவண்ணன் தனது மனைவி திருமதி. R. ஆதித்தியலட்சுமி பெயருக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதன் பேரில், முறையான ஆவணங்களின் அடிப்படையில் மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே இருந்த வீடு இடிந்திருந்த நிலையில், புதிதாக வீடு கட்ட தீர்மானித்து அதன் அடிப்படையில் பேரூராட்சியில் கட்டட அனுமதி (Plan Approval) பெற்றபின்னர், வீடு கட்ட முற்படும்போது அதே ஊரைச் சேர்ந்த திரு. ஆ. ராமசாமி (முன்னாள் சேர்மன்) தங்களை வீடுகட்ட விடாமல் பலவகையில் இடையூறு செய்வதாகவும், எந்தவித ஆதாரமும் இன்றி பேரூராட்சி அதிகாரிகளிடம் வாய்மொழியாக புகார் அளித்தும், தனது செல்வாக்கின்மூலமும் பேரூராட்சி அலுவலர்களை நிர்பந்தப்படுத்தி வீடு கட்டுவதற்கு பலவகையிலும் தொந்தரவு செய்துவருவதால், பேரூராட்சி அளித்த கட்டட அனுமதியின் அடிப்படையில், தன்னை வீடு கட்ட அனுமதிக்குமாறும், இதற்கு பேரூராட்சி மூலம் தொந்தரவுகள் இனிமேல் வராமல் இருக்கவும் விசாரணை மேற்கொண்டு ஆணையிடுமாறு வேண்டியுள்ளார்.
- ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ள 23.3.2022 நாளிட்ட விளக்க அறிக்கையுடன் அனுப்பிவைக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரரின் தகப்பனார் காலஞ்சென்ற வே. பழனிச்சாமி, த/பெ வேலு மூப்பனார் என்பவருக்கு கிராமங்களில் வீட்டு மனைகளை ஒப்படை செய்வதன்பேரில் திம்மரசநாயக்கனூர் கிராமத்திலிருக்கும் வே. பழனிச்சாமி, த/பெ வேலு என்பவருக்கு பெரியகுளம் தாலுகாவைச் சேர்ந்த கிராமத்திலிருக்கும் ஒரு வீட்டு மனைக்காக அவர் செய்துகொண்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் பிளாட் 14க்கு வடக்கிலும், பாதைக்குக் கிழக்கிலும், பிளாட் நெ.16க்கு தெற்கிலும், பாதைக்கு

மேற்கிலும் இருப்பதும், 002 சென்ட் நிலம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. பிளாட் நெ.15 30 x 45 சர்வே எண். 2193/3 என்பதும் தெளிவாகிறது.

- மனுதாரரின் தந்தையும், காலஞ்சென்ற திரு. வே. பழனிச்சாமி 2004ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் தேதி ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட பழைய வார்டு 5, புதிய வார்டு 18ல் பொட்டக்குளம் பாதையில் நத்தம் சர்வே எண்.2193/3ல் காலியிடம் கிழமேலடி 30 தென்வடல் அடி 29 1/4.க்கு கூடியது சதுரடி 877 1/2 உள்ள இடமும், இதற்குள் கட்டியுள்ள மண்மதில் செங்கல் சுவர் சுண்ணாம்புப் பூச்சு தென்பக்கம் தகரம் போட்ட கொட்டம் கிழமேலடி 30 தென் வடலடி 10க்கு சதுரடி 300 உள்ள கொட்டமும் சேர்ந்த இடத்தை தானசெட்டில்மெண்ட் மூலம் தனது மனைவி திருமதி. சுந்தரம்மாளுக்கு தானமளித்து பத்திரப்பதிவு செய்துள்ளார் (ஆவண எண்.3161/2004) என்பதும் ஆவணங்களின் அடிப்படையில் அறியப்படுகிறது.
- அதே சொத்தினை காலஞ்சென்ற திரு. பழனிச்சாமி அவர்களின் குமாரரும், மனுதாரருமான திரு. ப. மணிவண்ணன் அவரது மனைவி திருமதி. R. ஆதித்தியலட்சுமிக்கு 2019ஆம் வருடம் ஜனவரி மாதம் 4–ம் தேதி தானசெட்டில்மெண்ட் மூலம் தானமளித்து பத்திரப்பதிவு செய்துள்ளதும் (ஆவண எண்.12/2019) ஆவணங்களின்படி தெளிவாகிறது.
- இவ்விரண்டு ஆவணங்களிலுமே சக்கம்பட்டி கிராமம், நத்தம் சர்வே எண்.2193/3 என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2019 ஆண்டைய தான பத்திரத்தின்படி மேற்படி இடம் தற்கால UDRபடி நத்தம் புதிய புல எண்.2695/5 என உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளதும் அறியப்படுகிறது.
- காலஞ்சென்ற திரு. பழனிச்சாமி மற்றும் திருமதி. சுந்தரம்மாள் ஆகியோரின் ஒரே வாரிசுதாரர் திரு. மணிவண்ணன் என்பது மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள வாரிசு சான்றிதழின் மூலம் தெளிவாகிறது.
- சொத்து தொடர்பாக ஆண்டிப்பட்டி சார் பதிவாளரால் அளிக்கப்பட்டுள்ள வில்லங்கச் சான்றிதழ் எண்.EC/Andipatti/4877/2018 நாள் 11.12.2018ன்படி 01.1.1987 முதல் 12.02.2018 வரை 32 ஆண்டுகளுக்கு சொத்தைப் பொறுத்து பதிவு செய்திட்ட நடவடிக்கைகள் மற்றும் வில்லங்கங்கள் குறித்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டதென்றும், அத்தேடுதல்களில் எவ்வித வில்லங்கமும் காணப்படவில்லை என்று ஆண்டிபட்டி சார் பதிவாளரால் சான்றளிக்கப்பட்டுள்ளது.
- மனுதாரரின் மனைவி திருமதி. ஆதித்தியலட்சுமி கட்டட அனுமதி வேண்டி ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்கு 12.07.2019ல் விண்ணப்பம் அளித்தன் அடிப்படையில், ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள் எண்.395 நாள் 05.08.2019ல் ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.2193/3ல் 712 சதுர அடியில் புதிய தரைதளத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிக்கொள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- ஆண்டிப்பட்டி பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள கட்டட அனுமதியில் விதிக்கப்பட்டுள்ள பல்வேறு நிபந்தனைகளில், நிபந்தனை எண்.15–ல் கட்டிடம் கட்ட அனுமதி பெற்ற இடம், பொய்ப்பதிவு மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் சட்ட விதிகளுக்கு புறம்பாக பெற்றதாகவோ இருந்தால் மேற்படி அனுமதி உத்தரவு தானாகவே ரத்தாகிவிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- பேரூராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதியினைத் தொடர்ந்து, மேற்படி இடத்தில் வீடு கட்டுவதற்கு ஆ. ராமசாமி (முன்னாள் சேர்மன்) என்பவர் ஆட்சேபனை தெரிவித்திருந்தார் என்றும், அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டதில் மேற்படி இடமானது அரசு புறம்போக்கு நிலம் என தெரியவந்தது என்றும், எனவே ஆண்டிபட்டி பேரூராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதி செயல்முறை ஆணை ந.க.எண்.395/2019/அ3 நாள் 10.12.2019ல் ரத்து செய்து ஆணையிடப்பட்டதாக ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- ஆனால் திரு. ஆ. இராமசாமி, முன்னாள் சேர்மன், சக்கம்பட்டி அவர்களால் ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் திருமதி. ஆதித்தியலட்சுமி, க/பெ திரு. மணிவண்ணன் ஏன்பவருக்கு புதிய கட்டடம் கட்ட பேரூராட்சியால் வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்றும் மேற்படி இடம் தொடர்பாக அவர்கள் கொடுத்துள்ள ஆவணங்கள் போலியானது என்றும், எனவே வருவாய்த் துறை பதிவேடுகளில் உள்ள விவரங்களை தெரிந்து கட்டிடம் கட்ட அனுமதிக்கவேண்டுமென்றும், கட்டடம் கட்ட அனுமதிக்காமல் உத்தரவை இரத்து செய்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். இவரது புகார் மனுவில் புகார் மனு அளிக்கப்பட்ட நாள் குறித்த விவரமோ, அல்லது கையொப்பமிட்டு தேதி குறிக்கப்பட்ட விவரமோ காணப்படவில்லை. மேலும், மனுதாரர் கொடுத்துள்ள ஆவணங்கள் போலியானது என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளாரே தவிர, தனது புகாரின் உண்மைதன்மையை நிரூபிக்கக்கூடிய வகையில் உரிய ஆதாரங்கள் எதனையும் அவர் தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பவில்லை என்பது ஆவண நகல்களின் மூலம் அறியப்படுகிறது.

- திரு. ஆ. இராமசாமி அளித்த புகாரின் அடிப்படையில், திருமதி. ஆதித்தியலட்சுமிக்கு ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அனுப்பப்பட்டுள்ள 15.10.2019 நாளிட்ட அறிவிப்பில் கட்டட அனுமதி வழங்கிடக்கோரி அளிக்கப்பட்ட பட்டா ஆவணமானது பொய்யானது என்றும், சர்வே எண்.2193/3ல் கட்டப்பட்டுள்ள 1352 சதுர அடி இடமானது யாருக்கும் பாத்தியப்படாத "அரசு நத்தம் காலியிடம்" என புகார் வரப்பெற்றுள்ளதென்றும், எனவே அறிவிப்பு கிடைத்த 7 தினங்களுக்குள் கட்டட வரைபட அனுமதி உத்தரவினை ஏன் இரத்து செய்யக்கூடாது என்பதற்கான முகாந்திரத்தினை உரிய ஆவணங்களுடன் எழுத்து மூலம் பேரூராட்சிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் கட்டட

வரைபட அனுமதி உத்தரவு இரத்து செய்து உத்தரவிடப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.'

- ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அனுப்பப்பட்ட மேற்கண்ட அறிவிப்பு உள்ளூர் தபால் மூலம் 31.10.2019ல் பெற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கு திருமதி. R. ஆதித்தியலட்சுமி என்பவரால் 31.10.2019 நாளிட்ட விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இவரது பதிலறிக்கையில் கட்டட அனுமதி கோரி அளிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தும் மற்றும் பெரியகுளம் தாசில்தார் அவர்களால் 1976ல் பட்டா கொடுக்கப்பட்டுள்ளதால், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரிடமிருந்து எந்தவிதமான பட்டா மாறுதல் செய்யாதபட்சத்தில் அரசு நத்தம் காலியிடம் என்று புகார் செய்யும் தனிப்பட்ட நபர் நீதிமன்றம் சென்று தனது வரைபட நகல் மற்றும் காலிமனை குறித்து வழக்கு தொடர்ந்து யாருக்கும் பாத்தியப்படாத அரசு நத்தம் காலியிடம் என்று தீர்வு பெற்று மட்டுமே ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் புகார் அளிக்க முடியும் என்றும், எனவே தனது வரைபட நகல் மீது எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் செய்துள்ள புகாரை தள்ளுபடி செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

- இதனிடையே திரு. ஆ. ராமசாமி, முன்னாள் சேர்மன் அளித்த புகார் மனுவின் அடிப்படையில், திருமதி. ஆதித்யலட்சுமி என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரம் மற்றும் பட்டா நகல் ஆகியவற்றை இணைத்து, மேற்படி பத்திரத்தில் உள்ள இடமும் பட்டாவில் உள்ள இடமும் ஒரே இடம்தானா என்றும், பட்டாவின் மெய்த்தன்மை குறித்து சான்று வழங்கிடுமாறும் ஆண்டிப்பட்டி வட்டாட்சியர் ஆண்டிபட்டி பேரூராட்சி கடித எண்.ந.க.395/2019/அ3 நாள் 24.12.2019ன் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

- ஆண்டிப்பட்டி வட்டாட்சியருக்கு 24.12.2019ல் கடிதம் எழுதப்பட்டுள்ள நிலையில், வட்டாட்சியரின் பதிலறிக்கையை பெறுவதற்கு முன்னரே அதுவும், பேரூராட்சி செயல் அலுவலரால் திருமதி. ஆதித்தியலட்சுமிக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிவிப்பினையடுத்து, அவரால் எழுத்துபூர்வமாக அளிக்கப்பட்டுள்ள பதிலறிக்கையைகூட பரிசீலனை செய்யாமலும், திருமதி. ஆதித்தியலட்சுமியின் பதிலறிக்கையை பார்வையில் குறிப்பிடாமலும், ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் நடவடிக்கை ந.க.எண்.395/2019/அ3 நாள் 10.12.2019ன் மூலம் 15.10.2019 நாளிட்ட அறிவிப்பு வாயிலாக திருமதி. ஆதித்யலட்சுமிக்குச் சொந்தமான சர்வே எண்.2193/3ல் கட்டப்பட்டுள்ள நத்தம் மனையிடம் குறித்த முகாந்திரம் பேரூராட்சியில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், எனவே ஆண்டிப்பட்டி பேரூராட்சியால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி உத்தரவு எண்.60/2019 நாள் 5.8.2019–ஐ ரத்து செய்து உத்தரவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது அறியப்படுகிறது. செயல் அலுவலர் எந்தவிதமான ஆதாரங்களையும் ஆராயாமல் முன்னாள் சேர்மன் கொடுத்த புகாரின்

அடிப்படையில் அவசர கதியில் பேரூராட்சியால் 5.8.2019 அன்று வழங்கப்பட்ட கட்டட அனுமதியை ரத்து செய்து ஆணையிட்டுள்ளது ஏதோ உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள செயல் என்றே ஊர்ஜிதமாக அறியமுடிகிறது.

- திருமதி. ஆதித்தியலட்சுமி என்பவருக்கு அளிக்கப்பட்டுள்ள கட்டிட அனுமதி தொடர்பாக திரு. ஆ. இராமசாமி, முன்னாள் சேர்மன் அளித்துள்ள புகார் மனுவிலேயே மேற்படி இடம் தொடர்பாக அவர் கொடுத்துள்ள ஆவணங்கள் போலியானது என்றும், எனவே வருவாய்த்துறை பதிவேடுகளில் உள்ள விபரம் தெரிந்து கட்டிடம் கட்ட அனுமதிக்கவேண்டுமென்று குறிப்பிட்டுள்ள நிலையில், அவரது புகாரினைத் தொடர்ந்து திருமதி. ஆதித்யலட்சுமி அளித்த பத்திரத்தில் உள்ள இடமும், பட்டாவில் உள்ள இடமும் ஒரே இடம்தானா என்பதையும், பட்டாவின் மெய்த்தன்மை குறித்து சான்றளிக்குமாறும் ஆண்டிப்பட்டி வட்டாட்சியருக்கு 24.12.2019ல் கடிதம் எழுதிவிட்டு, அவரது அறிக்கையைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு பதிலாக, அதற்கு முன்னதாகவே அதுவும் திருமதி. ஆதித்யலட்சுமி அவர்களுக்கு அனுப்பப்பட்ட 15.10.2019 நாளிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அவரது விளக்கத்தினையும் பெறாமல், பேரூராட்சியால் ஏற்கனவே வழங்கப்பட்ட வரைபட அனுமதியினை ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது நடவடிக்கைகள் ந.க.எண்.395/2019/அ3 நாள் 10.12.2019–ன் மூலம் தன்னிச்சையாக ரத்து செய்துள்ளது தெளிவாகிறது. இதனை இம்முறைமன்ற நடுவத்தினால் ஏற்க இயலாது. மேலும், ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் இச்செயலை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.
- உரிய ஆவணங்களை கவனமாக பரிசீலித்தும், இடத்தினை ஆய்வு மேற்கொண்டபின்னரும் வழங்கப்பட்டிருக்க வேண்டிய கட்டட அனுமதியை முதலில் ஆவணங்களின் அடிப்படையில், கட்டட அனுமதியை வழங்கிவிட்டு, பின்னர் தனியார் ஒருவர் (முன்னாள் சேர்மன்) அளித்த புகாரின் அடிப்படையில், யாதொரு ஆவணங்களையும் பரிசீலிக்காமலும், ஆண்டிப்பட்டி வட்டாட்சியரிடம் கோரப்பட்ட அறிக்கை மற்றும் பட்டாவின் மெய்த்தன்மை குறித்த அறிக்கையினைப் பெறாமலும், திருமதி. R. ஆதித்தியலட்சுமிக்கு பேரூராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அவர் அளித்துள்ள விளக்கத்தினை பரிசீலிக்காமல், அதற்கு முன்னதாகவே மிகவும் அவசர அவசரமாக ஏற்கனவே பேரூராட்சியினால் வழங்கப்பட்ட கட்டட அனுமதியினை தன்னிச்சையாக ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ரத்து செய்துள்ளது ஏதோ உள்நோக்கத்துடனும், அவசர கதியிலும் மேற்கொள்ளப்பட்ட செயல் என்பதும் ஆவணங்களின்படி அப்பட்டமாக அறியப்படுகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

- செயல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள கட்டட அனுமதி ஆணையில் இடம்பெற்றுள்ள நிபந்தனைகளில் ஒன்றான நிபந்தனை எண்.15ன்படி கட்டிடம் கட்ட அனுமதி பெற்ற இடம், பொய்ப்பதிவு மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் சட்ட விதிகளுக்கு புறம்பாக பெற்றதாகவோ இருந்தால் மேற்படி அனுமதி உத்திரவு

தானாகவே ரத்தாகிவிடும் என்ற குறிப்பிட்டுள்ள நிலையில், உரிய ஆதார ஆவணங்களை பரிசீலித்து முடிவெடுக்கவேண்டிய பொதுப் பணியாளர் ஒருவர், அவசர கதியில் தனி நபர் ஒருவர் அளித்துள்ள புகாரின் அடிப்படையில் மட்டும் ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டட அனுமதியினை தன்னிச்சையாக ரத்து செய்துள்ளது புலனாகிறது.

- திரு. வே. பழனிச்சாமி, த/பெ வேலு மூப்பனார் 11.09.2010ல் இறந்ததற்கும், திருமதி. ப. சுந்தரம்மாள், க/பெ வே. பழனிச்சாமி என்பவர் 05.01.2011ல் இறந்ததற்கும் ஆண்டிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள இறப்புச் சான்றிதழ்களில் அவர்களது நிலையான வீட்டு முகவரி மற்றும் இறப்பின்போது வசிப்பிட முகவரி இரண்டிற்குமே 18–12–10A பொட்டக்குளம் பாதை, ஜக்கம்பட்டி, ஆண்டிப்பட்டி என்ற முகவரியே இடப்பட்டுள்ளதும், மனுதாரரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவிலும் அதே முகவரியையே வழங்கியுள்ள நிலையிலும் மற்றும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையிலும், மனுதாரர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலேயே தொடர்ந்து வசித்து வருகிறார் என்பது தெளிவாவதுடன், பேரூராட்சிக்கும் இது தெளிவாக தெரிந்திருந்தே, வேண்டுமென்றே ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டட அனுமதியினை இரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளது செயல் அலுவலரின் அலட்சியப் போக்கினையும், கடமையில் அக்கறையின்றி வைத்தோம் கவுத்தோம் என்ற நிலைப்பாட்டினையும் எடுத்துக்காட்டியுள்ளது.

- இம்முறைமன்ற நடுவத்திற்கு மனுதாரரால் வழங்கப்பட்ட புகார் மனுவிற்கு முன்னரே ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 24.12.2019–லேயே திருமதி. ஆதித்தியலட்சுமி என்பவரது பத்திரம் மற்றும் பட்டாவின் மெய்தன்மை குறித்து சான்றுவழங்கிட கடிதம் அனுப்பியும், இம்முறைமன்ற நடுவத்தினால் மனுதாரரது புகார் மனு குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்குப் பின்னரும், இன்றைய நாள் வரை ஆண்டிப்பட்டி வட்டாட்சியரது அறிக்கையை பெற்று அனுப்பாததால், அவர் கடமையில் உரிய கவனம் செலுத்தவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. ஒரு அதிகார முகமைக்கே பொது அலுவலர் இவ்வாறு அலட்சியம் காட்டியுள்ளபோது, பொது மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் அவர் எவ்வாறு செயல்படுவார் என்பதை இச்செயல் எடுத்துக்காட்டியுள்ளது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், சக்கம்பட்டியைச் சேர்ந்த திரு. P. மணிவண்ணன் என்பவரது புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் இம்முறைமன்ற நடுவ விசாரணையின் அடிப்படையில் நிரூபணமாகியுள்ளன. உரிய ஆவணங்களின் அடிப்படையில், ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.WD.18 பொட்டக்குளம் பாதை, சர்வே எண்.2193/3ல் திருமதி. ஆதித்தியலட்சுமி, க/பெ ப. மணிவண்ணன் என்பவருக்கு தரைதளம் 712 சதுர அடியில் குடியிருப்பு கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி அளித்துவிட்டு (அனுமதி உத்தரவு எண்.60/2019 நாள் 5.8.2019) பின்னர், தனி நபர் ஒருவரால் (முன்னாள் சேர்மன் திரு. ஆ. இராமசாமி) அளிக்கப்பட்ட

நாளிடப்படாத புகாரின் அடிப்படையில், உரிய ஆவணங்களை பரிசீலனை செய்யாமலும், திருமதி. ஆதித்தியலட்சுமி என்பவரால் கட்டிட அனுமதி கோரி அளிக்கப்பட்ட ஆவணங்களின் மெய்த்தன்மையையும், பட்டாவின் மெய்த்தன்மையையும் உறுதிபடுத்திக்கொள்ளாமலும், திருமதி. ஆதித்தியலட்சுக்கு பேரூராட்சியின் சார்பில் அளிக்கப்பட்ட அறிவிப்பிற்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை ஆய்வு செய்யாமலும், தன்னிச்சையாக ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ரத்து செய்துள்ளது (நடவடிக்கை ந.க.எண்.395/2019/அ3 நாள் 10.12.2019) உறுதியாகிறது. திரு. P. மணிவண்ணன் தகப்பனார் (லேட்) பழனிச்சாமி என்பவருக்கு புகாருக்குட்படுத்தப் பட்டுள்ள இடம் 1976ல் ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனை என்பதும், அதில் அவர் வசித்து, பின்னர் தனது மனைவி பெயருக்கும், பின்னர் அவர்களது வாரிசான திரு. P. மணிவண்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டதும், திரு. மணிவண்ணன் அவரது மனைவி திருமதி. R. ஆதித்தியலட்சுமி என்பவருக்கு தான செட்டில்மெண்ட் மூலம் மாற்றப்பட்டுள்ளதுமான இடத்தில் வீடு கட்டிக்கொள்ள அனுமதி வழங்கியபின்னர், அதனை பொறுப்பற்ற முறையில், ஆதார ஆவணங்களை பரிசீலனை செய்யாமலேயே ஏதோ உள்நோக்கத்துடன் ரத்து செய்துள்ளது குற்றமென்றே தெளிவாகிறது. பொறுப்பற்ற இச்செயலுக்குக் காரணமான சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு கடும் தண்டனையினை வழங்கிடுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், மனுதாரரிடம் உரிய விண்ணப்பம் மற்றும் கட்டட அனுமதிக்கான கட்டணங்களைப் பெற்ற பின்னரே ஆண்டிப்பட்டி பேரூராட்சியினால் கட்டட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், ரத்து செய்யப்பட்ட செயல்முறை ஆணையினை ரத்து செய்துவிட்டு, உரிய விதிமுறைகளின்படி கட்டட அனுமதியை ஒருமாத காலத்திற்குள் வழங்கிடுமாறு ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

இதுபோன்று விருப்பு, வெறுப்பு ஆகியவற்றுடன் செயல்படும் செயல் அலுவலர்கள் தனிநபர்களின் தூண்டுதல்களின் காரணமாக விதிகளை மீறி செயல்படும் செயல் அலுவலர்களை எச்சரித்தும் சுற்றறிக்கை அனுப்ப பேரூராட்சிகளின் ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. P. மணிவண்ணன்,
18–12–10A பொட்டகுளம் பாதை, சக்கம்பட்டி, ஆண்டிப்பட்டி வட்டம்,
தேனி மாவட்டம்–625 512

செயல் அலுவலர், ஆண்டிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி,
ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தேனி மண்டலம், தேனி–625 582
வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஆண்டிப்பட்டி

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

19/7/22
செயலர்
19.7.22